திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமான தக்கலை பகுதி வழியாக N.H.47 சாலை சென்றுகொண்டிருக்கிறது. இப்போது புதிதாக, அதற்கு நிகராக புதிய வழித் தடமாக நான்கு வழிச்சாலைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தக்கலையில் ஒரு மேம்பாலம் அமைப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அந்த மேம்பாலத்திற்கு தேவை இருக்கிறதா, இல்லையா என்பது நான்கு வழிச் சாலைப் பணிகள் நடைபெற்று முடிந்தபின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், சொல்லுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையை சொல்ல வேண்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோரிக்கை என்று சொல்லி நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நீங்கள் கோரிக்கையைச் சொல்ல வேண்டியதுதானே! நானா வேண்டாம் என்று சொன்னேன்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

(ஓ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலை, அடிப்படை பணிகள் மேற்கொள்ள வனத் துறை அனுமதி மறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்குத்தான் நான் உங்களை அழைத்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் விதி 55-ன்கீழ் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலையில் உள்ள பட்டா இடங்களுக்கு நிலத்தைச்*

சீர்செய்வதற்கும், குடிநீருக்கு bore well *வண்டி செல்வதற்கும், ஜே.சி.பி., பொக்லைன் போன்ற இயந்திரங்கள் செல்வதற்கும் வனத் துறையினால் அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகவே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *இதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஔ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஈஞ்சம்பாக்கம், பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற சோழிங்கநல்லூர் தொகுதியில் ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் நீண்ட நெடுநாட்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் 3,000 குடும்பங்களை அப்புறப்படுத்துகிற நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கிட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

(அஅ) கூடங்குளம் அணு உலை, நிலமளித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் கூடங்குளம் அணு உலை அமைவதற்கு நிலம் அளித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

நண்பகல் 12-00

(அஆ) திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள், வளவனாற்றைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*